## கைத்தொழில் [1]

மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் வேளாண்மைத்துறை 1981இல் அடைந்த குறிப்பிடத்தக்க வளர்ச்சிச் சாதனையைப் பேண இயலாதிருந்த வேளையில் தயாரிப்புக் கைத்தொழில் இதற்கு மாறாக குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியது. 1981இல் அனுபவித்த தற்காலிகப் பின்னடைவைத் தொடர்ந்து 1982இல் உண்மை நியதிகளில் பொதுவான கைத்தொழில் உற்பத்தி 9 சதவீதத்தால் அதிகரித்தது. ஒப்பிடுகையில் 1981இல் இது 2 சதவீதத்திலான அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது.

கைத்தொழில் உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க பொதுவான 9சதவீத[2] அதிகரிப்பின் முக்கிய கூறுகள், தனியார் துறைக் கைத்தொழிலில் ஏற்பட்ட 18 சதவீத உண்மை வளர்ச்சியொன்றையும், அரச துறையிலான 5 சதவீத வளர்ச்சியொன்றையும் உள்ளடக்குகின்றன. கைத்தொழில் உற்பத்தியில் துறை வாரியான அதிகரிப்புக்களைக் கருத்திற் கொள்ளும் போது புடவையும் அணியும் ஆடையும், தோல் உற்பத்திகள் (25 சதவீதம்) உணவு குடிபானம், புகையிலை உற்பத்திகளும் (14 சதவீதம்) மரமும் மர உற்பத்திகளும் (11 சதவீதம்) உருவாக்கப்பட்ட உலோகப் பொருட்கள் (10 சதவீதம்) இரசாயனமும் பெற்றோலிய உற்பத்திகளும் (11 சதவீதம்) தாளும் தாள் உற்பத்திகளும் (9 சதவீதம்) ஆகியவற்றில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. எனினும் அடிப்படை உலோக உற்பத்திகள் 38 சதவீதத்தினாலும், உலோக மல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் 17 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. பொதுவான அரசதுறைக் கைத்தொழிலின் உற்பத்தியின் வளர்ச்சி தனியார்துறைக் கைத்தொழில்களினதைப் பார்க்கிலும் குறைவானதாக இருந்தபோதும் கைத்தொழில் துறையில் உயர்வான மொத்த வளர்ச்சி வீதத்தை அடைவதில் முன்னையதன் வளர்ச்சி வீதம் முக்கிய செல்வாக்கைக் கொண்டிருந்தது. இது மொத்த உற்பத்தியில் அரசதுறைக் கைத்தொழில் உற்பத்தி கொண்டிருக்கும் அதிகளவு முக்கியத்துவத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

---

1. கடந்த காலத்தைப்போன்றே 1982ஆம் ஆண்டின் கைத்தொழில் துறையின் செயலாற்றத்துடன் தொடர்புள்ள தரவுகள் மத்திய வங்கியினால் அரச, தனியார் துறைகளிலுள்ள பிரபல்யமானதும் பதிவுசெய்யப்பட்டதுமான எல்லா பெரிய நடுத்தர சிறிய தயாரிப்புக் கைத்தொழில்களுக்கு முகவரியிடப்பட்ட கேள்விக் கொத்தின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டன. (எனினும் தேசிய கணக்குகளில் தயாரிப்பு நடவடிக்கையாக வகைப்படுத்தப்படும் பெருந்தோட்டத்துறையின் ஏற்று மதிப் பதனிடல் நடவடிக்கைகளை இது உள்ளடக்கவில்லை) பொதுவாக முகவரியிடப்பட்டவர்களின் மூன்றிலொரு பங்கினரிடமிருந்தே பதில்கள் கிடைக்கப்பெறுகின்றதோடு இவை அநேகமாக எல்லா முதன்மைக் கைத்தொழில்களையும் குறிக்கின்றன. தரவுகள் கிடைக்கப்பெறாத பகுதிகளுக்குப்பல்வகை அரச முகவர் நிலையங்களிலும் நிறுவனங்களிலும் கிடைக்கும் தரவுகளை அடிப்படையாகக்கொண்டே மதிப்பீடுகள் சேர்க்கப்பட்டுள்ளன.

2 உற்பத்தியின் மொத்தப் பெறுமதியின் அடிப்படையில் குறிப்பிட்ட ஆண்டிற்கான உள்நாட்டு இறைவரித்திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட மொத்த விற்பனைவரியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் உற்பத்திகளின் மதிப்பீடுகளுடன் இவ்வெண்தொகைகள் இணையானதாகவுள்ளன.

## அட்டவணை 1.18

## கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி 1978—1982

ரூபா பத்து இலட்சம்

| வகை | 1978 | 1979 | 1980 | 1981 | 1982(ஆ) |
|---|---|---|---|---|---|
| 1. உணவு குடிபானங்கள், புகையிலை .. | 2,609 | 2,856 | 3,899 | 4,496 | 5,246 |
| 2. புடவை, அணியும் ஆடை, தோல் உற்பத்திகள் ... | 1,008 | 1,128 | 1,923 | 3,040 | 3,863 |
| 3. மர, மர உற்பத்திகள் [தளபாடங்கள் உட்பட] ... | 124 | 166 | 289 | 315 | 361 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் .. | 376 | 445 | 476 | 626 | 725 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் .. | 3,279 | 4,508 | 9,416 | 12,015 | 13,099 |
| 6. பெற்றோலியமும் நிலக்கரியும் தவிர்ந்த உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் ... | 592 | 710 | 1,156(அ) | 1,250(அ) | 1,370 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 219 | 349 | 478 | 428 | 262 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறியும், போக்குவரத்துக் கருவிகளும் ... | 590 | 569 | 620 | 782 | 904 |
| 9. வேறெங்கும் குறிப்பிடப்படாத தயாரிக்கப்பட்ட உற்பத்திகள் ... | 55 | 50 | 54 | 58 | 74 |
| மொத்தம் ... | 8,852 | 10,781 | 18,311 | 23,010 | 25,904 |

அ. திருத்தியமைக்கப்பட்டவை
ஆ. தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கைத்தொழில் உற்பத்தியின் ஏனைய குறிகாட்டிகளும் கைத்தொழில் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றை குறிப்பதாகத் தோன்றுகின்றன.

1982இல் கைத்தொழில் மின், எரிபொருள் பாவனை முறையே 9 சதவீதத்தாலும் 25 சதவீதத்தாலும் அதிகரித்தன. எனினும் எரிபொருள் பாவனையில் பதிவு செய்யப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கு, இலங்கை மின்சபையினால் வெப்பவலுவின் அதிகரித்த உருவாக்கத்திற்கான இதன் பாவனை காரணமாகும். மறுபுறத்தில் இம்மேலதிக வலு உருவாக்கல் இயலளவு நீர் மின்வலு உருவாக்கத்தினைப் பாதிக்காத சாதகமான வானிலை நிலைமைகள், மின்வெட்டு அற்ற தொடர்ச்சியான மின்வழங்கல் ஆகியவற்றின் விளைவாகக் கைத்தொழிற்றுறையின் மொத்த உற்பத்தி அதிகரித்தது.

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வின் கீழான ஆண்டில் சிறு கைத்தொழில்களின் மின்வலுப்பாவனை 22 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் நடுத்தர பெரிய அளவுக் கைத்தொழில்கள் முறையே 9 சதவீத, 8 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. எனினும் 1982இன் இறுதிப்பகுதியில் இத்துறையிலான மின்வலுப்பாவனை தொடர்பான அதிகரிப்பு வீதத்தில் படிப்படியான வீழ்ச்சியொன்று காணப்படுவதாகத் தோன்றுகின்றது. இது பெரும்பாலும் 1982 யூனில் மின்வலுத் தீர்வைகளின் மேன்னோக்கிய திருத்தத்தினை தொடர்ந்து வலுவின் சிக்கனமான பாவனையின் விளைவாயிருக்கலாம்.

### அட்டவணை 1.19

### கைத்தொழிலில் வலு எரிபொருள் என்பவற்றின் பயன்பாடு 1980 — 1982

| விடயம் | 1980 | 1981 | 1982 (அ) |
|---|---|---|---|
| 1. மின்வலு (ஆ) (கிலோவாட் மணித்தியாலங்கள்) ... | 625.6 | 676.7 | 739.1 |
| 1.1. சிறுகைத்தொழில் ... | 20.0 | 21.3 | 26.0 |
| 1.2. நடுத்தரக் கைத்தொழில் ... | 285.7 | 308.9 | 338.7 |
| 1.3. பெரிய கைத்தொழில் ... | 319.9 | 346.5 | 374.3 |
| 2. கைத்தொழில் எரிபொருட்களின் உள்நாட்டு விற்பனைகள் (1000மெற்றிக் தொன்கள்) .. | 295.7 | 350.9 | 438.7 |
| 2.1. பார டீசல் .. | 61.0 | 106,6 | 169.3 |
| 2.2. உலை எண்ணெய் ... | 234.7 | 244.3 | 269.4 |

(அ) தற்காலிகமானவை.

(ஆ) தயாரிப்பு, ஏற்றுமதி பதனிடல் கைத்தொழில்களை உள்ளடக்கும். சிறு கைத்தொழில்கள் 50 கிவாமாவிற்கு குறைந்த இயலளவு கூறுகளையும் நடுத்தரக் கைத்தொழில்கள் 50 – 500 கிவாமாவிற்கு இடைப்பட்ட இயலளவுக் கூறுகளையும், பெரும் கைத்தொழில்கள் 500 கிவாமாவிற்கு கூடிய இயலளவுக் கூறுகளையும் கொண்டன என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளன.

அரசதுறை உற்பத்தியிலான அதிகரிப்பு அதிகளவிற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டு முழுவதிலும் இடைநிறுத்தப்படாத எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிற்பாடுகளினதும் ஏனைய அநேகமான கூட்டுத்தாபனங்களின் உயர் இயலளவுப் பயன் பாட்டினினதும் விளைவாகும். எனினும் பெற்றோலிய உற்பத்திகள் தவிர்ந்த அரசதுறையின் வெளியீடு 1.6 சதவீதத்தினால் மட்டுமே அதிகரித்ததென்பதை நோக்குகையில் பின்னையவற்றின் முக்கியத்துவம் சிறிதளவேயாகும்.

மீளாய்வின் கீழான ஆண்டில், பெற்றோலியம் (மொத்த கைத்தொழில் உற்பத்தியின் அரைப்பங்கிற்கு வகைகூறும்) அரச வளமாக்கித் தயாரிப்பு, தேசிய உப்பு, தேசிய புடவை, தேசிய ஒட்டுப்பலகை, இலங்கை டயர் கூட்டுத்தாபனங்களும் தேசிய பாற்சபையும் உயர்ந்த வெளியீட்டு மட்டங்களைக் காட்டின. வெளியீட்டு மட்டங்களில் வீழ்ச்சியைப் பதிவுசெய்த கூட்டுத்தாபனங்களாக உருக்குக் கூட்டுத்தாபனம், தேசிய தாள்கூட்டுத்தாபனம் ஆகியன விளங்கின. சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் காரணமாக அவற்றின் உற்பத்தியைக் குறைப்பதற்கு அவை கட்டாயப்படுத்தப்பட்டன. சூளையில் பேணல் வேலைகள் நடைபெற்றதால் குறைவான உற்பத்தி மட்டமொன்று சீமெந்துக் கூட்டுத்தாபனத்தினால் பதிவுசெய்யப்பட்டது.

## அட்டவணை 1.20
## அரசதுறை முதன்மை கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் (அ)
1977 = 100

| வகை | 1980 | 1981 | 1982 (ஆ) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை (இ) ... | 88.7 | 80.6 | 82.2 |
| 2. புடவை, அணியும் ஆடை, தோல் உற்பத்திகள் ... | 83.8 | 118.3 | 135.7 |
| 3. மர. மர உற்பத்திகள் . | 158.1 | 136.4 | 151.8 |
| 4. தாள், தாள் உற்பத்திகள் ... | 130.4 | 141.1 | 133.3 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் . | 125.0 | 118.9 | 131.5 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் ... | 149.8 | 161.8 | 133.1 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் ... | 197.7 | 169.0 | 106.3 |
| 8. உருவாக்க்கப்பட்ட உலோக உற்பத்திகள் ... | 115.4 | 82.2 | 96.3 |
| எல்லா வகைகளும் .. | 119.7 | 118.4 | 124.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) பெருந்தொகையான அரசதுறைக் கைத்தொழில்களை கருத்தில் எடுப்பதற்காக இச்சுட்டெண் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) தற்காலிகமானவை

(இ) அரச மாவரைக்கல் கூட்டுத்தாபனம 1982 ஒகத்திலிருந்து தனது மாவரைத்தல் நடவடிக்கைகளை நிறுத்திக்கொண்டது.

1982இல் அநேகமான அரசதுறைத் தயாரிப்புக் கூட்டுத்தாபனங்களின் விற்பனைகள் அதிகரித்தமை அவதானிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைஅதன்விற்பனைகளில் அடைந்த கூட்டுத்தாபனங்களுள்இலங்கைப்பெற்றோலியம்,அரச வளமாக்கித்தயாரிப்பு, இலங்கைஎண்ணெயும் கொழுப்பும், இலங்கை ஒட்டுப்பலகை,இலங்கைடயர்,இலங்கைகனிப்பொருள்மணல்கூட்டுத்தாபனங்களும்அரசுடைமையாக்கப்பட்ட பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனம் ஆகியன விளங்கின. மாறாக 1982இல் உருக்கு, வன்கலக் கூட்டுத்தாபனங்களின் விற்பனை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. இலங்கை சீமெந்து, அரசமர, அரச அகழ்வும் கனிப் பொருள் அபிவிருத்தியும் கூட்டுத்தாபனங்களும் மீளாய்வின் கீழான ஆண்டில் அவற்றின் விற்பனைச் செயலாற்றத்தில் நல்லமுறையில் செயற்படவில்லை.

அரசதுறைத் தயாரிப்புக் கூட்டுத்தாபனங்களின் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 760 இலட்சத்தினால் (சிஎஉ 30 இலட்சம்) ரூ. 36,860 இலட்சமாக (சிஎஉ 1,600 இலட்சம்) 1982ஆம் ஆண்டில் அதிகரித்து முன்னைய ஆண்டிற்குமேலாக 2 சதவீத அதிகரிப்பொன்றை காட்டியது. வளமாக்கியின் உள்நாட்டு தயாரிப்புக்காக நப்தா பாவிக்கப்பட்டதன் முக்கிய காரணமாக பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1981இல் ரூ. 33,770 இலட்சத்திலிருந்து 1982இல் ரூ. 32,530 இலட்சமாக வீழ்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கதொரு பண்பாக இருந்தது. இதன் விளைவாக தயாரிப்புக் கூட்டுத்தாபனங்களின் மொத்த ஏற்றுமதி வருவாய்களில் பெற்றோலிய உற்பத்திகளின்பங்கு 1981ம்ஆண்டில் 94சதவீதத்திலிருந்து மீளாய்வின் கீழான ஆண்டில் 88 சதவீதத்திற்குவீழ்ச்சியடைந்தது. எனினும்1982இல் ஏற்றுமதித்துறையில் புகுந்த வளமாக்கித் தயாரிப்புக் கூட்டுத்தா

## அரசதுறையின் * கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்

*1977 = 100*




இலங்கை மத்திய வங்கி

* 26 பெரும் கைத்தொழில் முயற்சிகளின் வெளியீட்டைப் பிரதிபலிக்கிறது.

பனத்தின் ஏற்றுமதி வருவாய்களும், இலங்கைக் கனிப்பொருள் மணற் கூட்டுத் தாபனமும் அரசுடைமையாக்கப்பட்ட பிரித்தானிய இலங்கைக் கூட்டுத் தாபனமும், இறக்குமதிசெய்யப்பட்ட உள்ளீட்டுப் பொருட்களை உயர்ந்தளவில் கொண்ட பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்களின் வீழ்ச்சியினை அவற்றின் அளவிற்கும் கூடுதலாக எதிரீடு செய்வதற்கும் உதவின.

வர்த்தக ரீதியில் திறமையான அடிப்படையின்மீது தொழிற்படுமாறு அரச துறையின் முக்கிய தயாரிப்புக் கைத்தொழில்கள் வேண்டப்படும் திறமையான அரசதுறையொன்றின் உருவாக்கமே 1977இல் இருந்தன புதிய கைத்தொழில் கொள்கையின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இம்முயற்சிகளில் அநேகமானவை 1982இல் இலாபத்தில் தொழிற்பட்டன. மறுபுறத்தில் அரச வளமாக்கித் தயாரிப்பு இலங்கை உருக்கு, அரசவன்கல, தேசிய புடவை, தேசிய தாள் கூட்டுத்தாபனங்கள் நட்டங்களை அடைந்தன.

1982இல் அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளுக்கான மொத்த அரச மாற்றற் கொடுப்பனவுகள் ரூ. 4,580 இலட்சமாக விளங்கி மூலதன மாற்றல்கள் வடிவில் ரூ 3,990 இலட்சத்தையும் நடைமுறை மாற்றற் கொடுப்பனவாக ரூ. 590 இலட்சத்தையும் கொண்டிருந்தது. அரச வளமாக்கித் தயாரிப்புக் கூட்டுத்தாபனமே அதிகளவு தொழிற்படு மூலதனத் தேவைகளுக்காக (ரூ. 3,000 இலட்சம்) மூலதன மாற்றல்களின் பெரும் பகுதியின் பெறுநராக விளங்கிய வேளையில் நடைமுறை மாற்றல்களின் பெரும்பகுதி (ரூ. 460 இலட்சம்) நுகர்வோருக்கான உதவு தொகையிலிருந்து எழும் கடப்பாடுகளை ஈடு செய்வதற்காக தேசிய பாற்சபைக்கு வழங்கப்பட்டது.

அரசதுறைக் கைத்தொழில்களைப் போன்ற தனியார் துறைக் கைத்தொழிலுக்கு விபரமாகத் தரவுகள் கிடைக்கப்பெறாவிடினும் ஒப்பீட்டு ரீதியில் பெரிய நிறுவனங்கள் குறிப்பிடத்தக்களவு திறமையாகச் செயலாற்றியதாகத் தோன்றும் வேளையில் திறமையற்ற சிறிதளவிலான முயற்சிகள் பிரச்சினைகளை எதிர்நோக்கின. பொதுவாக 1977ஆம் ஆண்டில் இறக்குமதிகள் தாராளமாக்கப்பட்டதிலிருந்தும் அத்தகைய தொழில்களால் பிரச்சினைகள் எதிர்நோக்கப்பட்டன. 1977 இன் பொருளாதார சீராக்கத்திற்கு முன்பு இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில்கள் கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள், வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடுகள், உயர்ந்த தீர்வைகள் என்பனவற்றால் உயர்ந்தளவில் பாதுகாக்கப்பட்டன. பல சமயங்களில், இக்கட்டுப்பாடுகள் அதிகரித்து பல திறமையற்ற கைத்தொழில் பிரிவுகளை உறுதியடையச் செய்தன. முதலீடு செய்பவர்கள் சிலரின் பாதுகாப்பின் ஒரே வழியான வர்த்தகத்திற்கான தடைகளை அகற்றியதுடனும் பாதுகாப்பான தீர்வைகளை மாற்றியதுடனும் குறிப்பாக முதன்மையானவர்கள், அவற்றின் இயலளவுப் பயன்பாட்டை உறுதியாக்குவதன் மூலமும் உற்பத்திகளை தரமுயர்த்துவதன் மூலமும் இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திகளிலிருந்தான சவாலுக்கு எதிராகத் தங்கள் போட்டி வலிமையை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தனர். இதன் பின்னர் தனியார் கைத்தொழில்களி

## அட்டவணை 1.21

## கைத்தொழில் முயற்சிகளுக்கு அரசின் நிதி மாற்றல்கள் 1980—1982

ரூபா பத்து இலட்சம்

| கூட்டுத்தாபனங்கள்/முயற்சிகள் | | மூலதனம் | | | நடைமுறை | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1930 | 1981 | 1982* | 1980 | 1981 | 1982* | 1980 | 1981 | 1982* |
| தேசிய பாற்சபை | ... | 15.5 | 50.5 | 20.9 | 53.0 | 44.3 | 45.9 | 68.5 | 94.8 | 66.8 |
| இலங்கை எண்ணெய் கொழுப்பு | ... | 25.1 | 34.7 | 5.9 | 41.9 | — | — | 67.0 | 34.7 | 5.9 |
| இலங்கைச் சீனி | ... | 8.0 | 46.8 | 72.4 | — | — | — | 8.0 | 46.8 | 72.4 |
| அரச மாவரைத்தல் | ... | — | — | — | 21.5 | — | — | 21.5 | — | — |
| தேசிய புடவை | ... | — | — | — | 26.6 | — | — | 26.6 | — | — |
| அரச மர | ... | 0.1 | — | — | — | — | — | 0.1 | — | — |
| தேசிய தாள் | ... | 40.4 | 4.8 | — | 28.7 | 21.2 | 10.0 | 69.1 | 26.0 | 10.0 |
| அரச இறப்பர் தயாரிப்பு | ... | — | — | — | — | — | 0.7 | — | — | 0.7 |
| பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனம் | ... | 10.5 | — | — | 8.2 | — | — | 18.7 | — | — |
| இலங்கை ஆயுள்வேத மருந்துகள் | ... | — | 7.5 | — | — | — | — | — | 7.5 | — |
| இலங்கைப் பெற்றோலியம் | ... | 10.7 | — | — | — | — | — | 10.7 | — | — |
| அரச வளமாக்கி தயாரிப்பு | ... | 397.5 | 88.5 | 300.0 | — | 269.0 | — | 397.5 | 357.5 | 300.0 |
| தேசிய சுரங்கம் அறுத்தலும் கனிப்பொருள் அபிவிருத்தியும் | | — | — | — | 1.9 | — | — | 1.9 | — | — |
| இலங்கை உருக்கு | ... | 10.7 | 7.9 | — | — | — | — | 10.7 | 7.9 | — |
| அரச வன்கலம் | .. | 2.0 | — | — | — | — | — | 2.0 | — | — |
| தேசிய பொதியிடல் பொருட்கள் | ... | 0.3 | — | — | — | 6.0 | 2.5 | 0.3 | 6.0 | 2.5 |
| வரையறுக்கப்பட்ட இலங்கை ஒட்சிசன் | .. | 24.0 | 10.0 | — | — | — | — | 24.0 | 10.0 | — |
| மொத்தம் | ... | 544.8 | 250.7 | 399.2 | 181.8 | 340.5 | 59.1 | 726 6 | 591.2 | 458.3 |

* தற்காலிகமானவை

மூலம்: பொதுத் திறைசேரி

ஞல் எதிர்நோக்கப்பட்ட பிரச்சினைகள் புதிய வடிவொன்றை எடுப்பதாகத் தோன்றுகின்றன. இறக்குமதித் தாராளமாக்கலின் அறிமுகப்படுத்தலிலிருந்து பட்டுணர்ந்த இறக்குமதி உற்பத்திகளின் நேரடிப் போட்டியைத் தவிர நிதிச்சிக் கல்களிலும் உயர்வலுச் செலவுகளிலும் குறைபாடுகள் எதிர்நோக்கப்பட்டன. அண்மைய கடந்த காலங்களில் உருவான இன்னெரு பிரச்சினை, அதிகளவு வருவாயுள்ள தொழில்களைத்தேடி வெளிநாட்டுக்குச் செல்லும் தொழில் நுட்பவியலாளர்களும் திறமையுள்ள மனித வலுவினதும் வெளிப்பாய்ச்சலைத் தொடர்ந்து அப்படியானவர்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடாகும்.

கைத்தொழில் முதலீடுகளை முன்னேற்றவும், நிறுவப்பட்ட கைத்தொழில்களுக்கு உதவும் நோக்கிலும் 1982 இன் பல இறை நாணய வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இறக்குமதித் தீர்வைத் திருத்தங்களும் மேலதிக நிதி வசதிகளும் அவற்றில் குறிப்பிடத்தக்கவை, தாள், தாள் உற்பத்திகள் மீதான இறக்குமதித் தீர்வைகள் ஆண்டுக் காலப்பகுதியில் அதிகரித்தன. தெரிந்தெடுக்கப்பட்ட உருக்கு உற்பத்திகள் மீதான தீர்வைகளும் அவ்வாறே விளங்கின. மேலும் அநேக மூலப் பொருட்கள் மீதான இறக்குமதித் தீர்வைகள் மொத்தக் கழிவு வசதிகளின் மீளப் பெறுகையுடன் ஒன்று சேர்ந்து முன்னைய ஆண்டின் பெயரளவிலான மட்டங்களுக்கு மீண்டும் குறைக்கப்பட்டன. நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியத்தின் கீழும், ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களுக்கான உதவியின் கீழும் அதிகரித்த வசதிகளின் ஏற்பாட்டிற்கு மேலதிகமான நிதிவசதிகள் சேர்க்கப்பட்டன. அப்படியான வழிமுறைகளின் விபரங்கள் வர்த்தகம், பணமும் வங்கித்தொழில் அபிவிருத்திகள் என்பவற்றின் கீழ் இவ்வறிக்கையின் வேறேரிடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

1982 இல் கைத்தொழில் முன்னேற்றத்தையும் உற்பத்தியின் விரிவாக்கத்தையும் உள்ளடக்கிய கைத்தொழில் துறையில் பல குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் நடைபெற்றன, எப்பாவெல பாறைப் பொசுபேற்று படிவத்தைப் பயன்படுத்தி பொசுபேற்று வளமாக்கி தயாரிப்புக்கான வசதிகளை மேற்கொள்வதற்காக அரசு அகழ்வு, கனிப்பொருள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கும் ஐ. அ. நாடுகளின் அக்கிரிக்கோ தொகுதிக் கூட்டு நிலையங்களுக்கும் இடையே உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. இலங்கை அரசிற்கும் இந்தியாவின் வரையறுக்கப்பட்ட கே. சி. பி.க்குமிடையே செவனகல சீனி அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் பொருட்டு தொழிற்சாலையொன்றைக் கட்டுவதற்காக 1982 இல் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது. தொழிற்சாலையின் ஆண்டு இயலளவு ஏறத்தாழ 27,000 தொன்கள் சீனி என எதிர்பார்க்கப்பட்டது. இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்தின் உருக்கு உருக்குதலிலும் தொடர்ச்சியான வார்க்கும் தொழிற்சாலையின் உருக்கு வேலையின் இரண்டாம் கட்டம் 1982 இல் செயற்படுத்தப்பட்டது. இத்தொழிற்சாலை உள்ளூரில் கிடைக்கும் கழிவு இரும்பைப் பயன்படுத்தி ஆண்டு வெளியீட்டு இயலளவு 60,000 தொன்கள் இயலளவினை கொண்ட உருக்குத்துண்டுக்கட்டைகளை

உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டது. முழுஅளவில் உற்பத்தி நடைபெறும் போது 550 ஆட்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரச வளமாக்கித் தயாரிப்புக் கூட்டுத்தாபனத்தின் நைலோன் 6 செயற்றிட்டமும் யூரியாத் தொழிற்சாலையும் குறைந்த விற்பனையாலும் கூடிய உற்பத்திச் செலவினாலும் 1982இல் சிக்கல்களை எதிர்நோக்கின. அண்மையில் செயற்படச் செய்த இவ்விரு தொழிற்சாலைகளும் தொடக்கத்தில் நாட்டின் தேவைகளை பெரியளவில் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டன. எனினும் நைலோன் 6 செயற்றிட்டம் அதன் ஆற்றலை மதிப்பிடுவதன் பொருட்டு தற்காலிகமாக மூடப்பட்ட வேளையில் வளமாக்கித் தயாரிப்புத் தொழிற்சாலையின் உற்பத்தி இடை நிறுத்தங்களுடன் தொடர்ந்தது. பின்னையதன் விடயத்தில் அதன் உற்பத்தியின் கணிசமானளவு உற்பத்திச் செலவிலும் குறைந்த விலைகளில் ஏற்றுமதி செய்யப்பட்டது. பெரிய அளவிலான சில அரச முயற்சிகள் வர்த்தக ரீதியான ஆற்றல்பற்றிய உடனடி மீளாய்வொன்றின் தேவையை இந்நடவடிக்கைகள் காட்டுகின்றன.

வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக் குழு (வெமுமகு) வெளிநாட்டுக்கூறாக ரூ. 19,430 இலட்சத்துடன் மொத்த முதலீடாக ரூ. 30,360 இலட்சத்தைக் கொண்ட 102 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியது. ஒப்புதல் வழங்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த தொழில்வாய்ப்பு ஆற்றல் 11,702 ஆட்களாக விளங்கும் வேளையில் ஒப்புதல் வழங்கப்பட்ட அநேக கைத்தொழில்கள் உள்ளூர் மூலப்பொருட்களையே முக்கிய உள்ளீடாகப் பயன்படுத்தும்.

வெமுமகு வினால் நடாத்தப்பட்ட அளவையொன்று 1982யூன் இறுதியில் 73 செயற்றிட்டங்கள் தயாரிப்புத்துறைத் தொழிற்பாட்டில் இருந்ததைக்காட்டின. இச்செயற்றிட்டங்கள் உண்மையான வெளிநாட்டு முதலீடாக ரூ. 4,120 இலட்சத்தை கொண்டிருந்தன. இச்செயற்றிட்டங்கள் மீது எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு முதலீடான ரூ. 4,400 இலட்சத்துடன் இது சாதகமாக ஒப்பிடப்படுகின்றது. புடவை தயாரிக்கப்பட்ட ஆடைத்துறை தொழிற்பாட்டிலிருக்கும் அதிக கூடிய எண்ணிக்கையான 35 செயற்றிட்டங்களுக்கும் ரூ. 2,640 இலட்சம் கொண்ட வெளிநாட்டு முதலீட்டுக்கும் வகைகூறுகிறது. தொழிற்பாட்டிலிருக்கும் செயற்றிட்டங்கள் 14,964 ஆட்களுக்கு நேரடித் தொழில் வாய்ப்பை வழங்கின.

உள்நாட்டு முதலீட்டு மதியுரைக்குழு (உமுமகு) மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் 297 கைத்தொழில் செயற்றிட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கியது. இச்செயற்றிட்டங்களின் முதலீட்டு ஆற்றல் ரூ. 2,310 இலட்சமாக விளங்கியதோடு ஏறத்தாழ 8,429 ஆட்களுக்கு தொழில்வாய்ப்பினை வழங்க இவை எதிர்பார்க்கப்பட்டன.

1981இல் கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூ. 72,960 இலட்சத்திலிருந்து (சிஎஉ 3,220 இலட்சம்) 1982இல் ரூ. 82,710 இலட்சமாக (சிஎஉ 3,600இலட்சம்) 12 சதவீத அதிகரிப்பைக் காட்டியது, இது புடவையும் ஆடையும்

(16 சதவீதம்) ஏனைய ஏற்றுமதிகள் (63 சதவீதம்) ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்பின் விளைவாகும்.

ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில் மயமாக்கல் உபாயங்களில் முக்கியபங்கொன்றை முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் (முஊவ) தொடர்ந்தும் வகித்தது. மு. ஊ. வலயத்திற்குப் பொறுப்பான இணைப்புக் குழுவான கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு (கொபெபொஆகு) 1982இல் தனியார் வெளிநாட்டு முதலீட்டை முன்னைய ஆண்டைவிட சிறிதளவு கூடிய விதத்தில் தொடர்ந்தும் கவர்ந்து வந்தது. மீளாய்வின் கீழான ஆண்டில் கொபெபொஆகுவினால் பதினறு செயற்றிட்டங்கள் ஒப்புதலளிக்கப்பட்டு ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மொத்த எண்ணிக்கை 1982 இறுதியில் 171ஆக உயர்ந்தது. மொத்தம் ரூ. 6,840 இலட்ச முதலீட்டைக் (இதில் ரூ. 4,670 இலட்சம் வெளிநாட்டு) கொண்ட பதினெரு கைத்தொழில் முயற்சிகள் கொபெபொஆகு வுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடப்பட்டன. இவ்வாண்டுக் காலப்பகுதியில் வர்த்தக உற்பத்தியிலிருந்த 51 நிறுவனங்களுள் (அவற்றில் 46 கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில்) 24 தைக்கப்பட்ட ஆடைகளின் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தமை கூட்டப்பட்ட உள்நாட்டு பெறுமதி ஒப்பீட்டளவில் குறைவான உற்பத்திகளின் ஏற்றுமதி சார்ந்த தயாரிப்பு நடவடிக்கைகளின் செறிவைப் பிரதிபலித்தது. எனினும் 1982இல் வழங்கப்பட்ட ஒப்புதல்களின் தன்மையின்படி பிரதிபலித்தவாறு கொபெபொஆ அமைப்பு ரீதியான சமநிலையின்மையை ஈடுசெய்யும் விதத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டது. 1982இல் கொபெபொஆ உடன் உடன்படிக்கை செய்து கொண்ட செயற்றிட்டங்களின் வகை முஊவ வின் நடவடிக்கைகளின் அதிகளவு பன்முகப்படுத்தல் சார்பாக ஊக்கமளிக்கும் போக்கொன்றைக் காட்டியது. 1982இல் கொபெபொஆ வுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் மின்காந்த முனைகள், மின், மின்னியக்க உற்பத்திகள், மென் தும்புத் துவாய், தளபாடங்கள், கயிற்றுப்பாயும் கயிற்று நூலும், சுடுதண்ணீர்ப்போத்தல்கள், பித்தளைகுழாய்கள், பனிச்சறுக்குக்காலணிகள், அரியும் வாள்கள் ஆகியன தயாரிக்கும் செயற்றிட்டங்களை உள்ளடக்கும்.

1982இல் 5,005 தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டு கொபெபொஆ நிறுவனங்களின் தொழில் வாய்ப்பின் மொத்த எண்ணிக்கை 1982 இறுதியளவில் 24,926 இற்குக் கொண்டு வரப்பட்டது. உற்பத்தியைப் போன்றே தொழில் வாய்ப்புக்களும் ஆடைத் தயாரிப்புத் துறையில் செறிந்து காணப்பட்டதுடன் மொத்தத் தொழில் வாய்ப்புக்களின் 69 சதவீதத்திற்கும் வகைகூறியது. இவற்றுடன் மதிப்பீடுகள் கிடைக்கப்பெருத முஊவ இனல் உருவாக்கப்பட்ட மறைமுகத் தொழில் வாய்ப்புக்களுக்கும் காணப்படுகின்றன. 1982இல் கொபெபொஆ ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் ரூ. 16,550 இலட்சத்திற்கு 42 சதவீதத்தால் அதிகரித்தன. இவ்வாண்டுக் காலப்பகுதியில் இரண்டாவது பெரிய ஏற்றுமதி விடயமான இறப்பர் உற்பத்திகளிலிருந்தான வருவாய்கள் 80 சதவீதத்திற்கும் மேலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றை எடுத்துக் காட்டின. எனினும், கொபெபொஆ இன் மொத்த ஏற்றுமதி வருவாய்களின் 78 சதவீதம் அணியும் ஆடைகள் ஏற்றுமதிகளினுல் வகைகூறப்பட்டது.

அட்டவணை 1.22

**முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் - தொழில்நிலையும், ஏற்றுமதி வருவாய்களும்**

| கைத்தொழில் | 1981 (அ) | | 1982 (ஆ) | |
|---|---|---|---|---|
| | தொழில்நிலை எண்ணிக்கை (திசெம்பர் இறுதி) | மொத்தஏற்றுமதி வருவாய்கள் (கஏபெ) ரூ. ப. இ. | தொழில்நிலை எண்ணிக்கை (திசெம்பர் இறுதி) | மொத்தஏற்றுமதி வருவாய்கள் (கஏபெ) ரூ. ப. இ. |
| 1. ஆடைகள் ... | 16,141 | 963.1 | 17,219 | 1,292.0 |
| 2. இறப்பர் உற்பத்திகள் .. | 920 | 44.7 | 2,395 | 80.4 |
| 3. மின் கருவிகள் ... | 286 | 19.5 | 279 | 25.2 |
| 4. இரத்தினக்கல் வெட்டலும் ஆபரணங்களும் ... | 309 | 3.8 | 587 | 14.9 |
| 5. மீன்பிடி கருவிகளும் துணைக்கருவிகளும் ... | 198 | 8.8 | 172 | 13.4 |
| 6. தேயிலை உறைகளிலடைத்தல் ... | 23 | 9.3 | 13 | 10.5 |
| 7. மரமுந்திரி உற்பத்திகள் ... | 265 | 13.7 | 391 | 7.2 |
| 8. ஏனையவை .. | 1,587 | 100.5 | 3,870 | 211.7 |
| மொத்தம் | 19,729 | 1,163.3 | 24,926 | 1,655.3 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை. மூலம்: கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழு

(ஆ) தற்காலிகமானவை

முன்னைய ஆண்டுகளில் சில சிறிய திறமையற்ற முயற்சிகளினால் அவதானிக்கப்பட்ட இறக்குமதிகளில் அதிகளவு போட்டியினால் ஏற்பட்ட சவால்களை எதிர்நோக்குவதில் சிரமங்களை அனுபவிக்க வேண்டியிருந்தும் தனியார்துறைக் கைத்தொழிலினால் இச்சவால்களை எதிர்நோக்க மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான முயற்சி 1982இல் அவதானித்த மற்றொரு ஊக்கமளிக்கும் அபிவிருத்தியாகும். எனினும் சாதகமான முதலீட்டுச் சூழ்நிலையும் உள்நாட்டு முதலீட்டு )மதியுரைக் குழுவினால் (உமுமகு) ஒப்புதல் வழங்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கையும் இருந்தபோதும் மீளாய்வின் கீழான ஆண்டு உட்பட கடந்த பல ஆண்டுகளாக அப்படியான செயற்றிட்டங்களின் மீதான உண்மையான புதிய முதலீடு வீழ்ச்சியடையும் போக்கை பதிவுசெய்துள்ளதாகக் காணப்படுகின்றது. மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் உமுமகு வினால் வழங்கப்பட்ட புதிய ஒப்புதல்களும் வீழ்ச்சியடைந்தன. இது ஒருவேளை 1982 ''தேர்தல் ஆண்டு'' என்ற காரணத்துடன் தொடர்புடையதாக இருக்கலாம். வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழுவினால் (வெமுமகு) வழங்கப்படும் ஒப்புதல்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி அவதானிக்கப்பட்ட போதிலும் ஏற்கனவே ஒப்புதலளிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் கைத்தொழிலில் ஈடுபடுவது அதிகரித்துக் கொண்டு வருகின்றது. உமுமகு வினால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களைவிட வெமுமகு செயற்றிட்டங்களில் அநேகமானவை உயர்ந்தளவு ஏற்றுமதி உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளதால் இறக்குமதிப் பதிலீட்டிலிருந்து ஏற்றுமதி ஊக்குவிப்பிற்கான அவசியத்தின் பெயர்வு 1977 இறுதியிலிருந்து பின்பற்றப்பட்ட பொருளாதாரக் கொள்கையின் ஏற்றுமதிசார்ந்த உபாயங்களுடன் உண்மையில் இணைவானதாக இருந்தது. அரசதுறைத் தயாரிப்பின் இயலளவின் மீதான முதலீடு அதிகளவு கட்டுப்பாடான மதிப்பிடும் வழிமுறைகட்கு உட்படும் சூழ்நிலையில் தனியார்துறைக் கைத்தொழில் மீதான முதலீடு மொத்தக் கைத்தொழில் உற்பத்தியின் அதிகரிப்பை உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்கைக் கொண்டிருக்கின்றது.